செ.வெ.எண்.214 நாள்.13.05.2017

## காஞ்சிபுரம் மாவட்டம்

## வாலாஜாபாத் பேரூராட்சியில் 200 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 85 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவியும், 150 பயனாளிகளுக்கு தாலிக்கு 4 கிராம் தங்கத்தையும் மாண்புமிகு ஊரக தொழில்த்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் வழங்கினார்.மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

**************

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் பேரூராட்சியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் 100 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியோ 10 இலட்சம் மானியத்திலான பணி ஆணைகளையும், சமூக நலத்துறை சார்பில் 150 பயனாளிகளுக்கு தலா 4 கிராம் தங்கம், முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தில் 50 பயனாளிகளுக்கு ரூ.90 இலட்சம் மதிப்பிலான பணி உத்தரவையும், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகளுக்கான பணி உத்தரவையும் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

இவ்விழாவில் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்கு உலகளவில் இந்திய அளவில் போற்றக்கூடிய எண்ணற்ற திட்டங்களை தந்தார். மக்கள் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பு மட்டுமின்றி ஏழை, எளிய அடித்தட்டுமக்கள், பாட்டாளி மக்கள் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். ஏழை பெண்களுக்கு திருமணத்தின் போது தங்கத்தில் தாலிக்கு ஏங்கிய நேரத்தில் அம்மா அவர்கள் 10 வகுப்பு வரை படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கம் மட்டுமின்றி ரூ.25,000/– உதவித்தொகை பட்டயம் மற்றும் பட்டம் முடித்த பெண்களுக்கு ரூ.50, 000/–ம் உதவித்தொகையுடன் 4 கிராம் தங்கம் என அள்ளித்தந்தார்கள். இதன்மூலம் ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு உதவி புரிந்தது மட்டுமின்றி பெண்கள் கல்வித்தகுதியை பெறுவதற்கும் வழி வகுத்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தாலிக்கு 4 கிராம் தங்கம் என்பதை 8 கிராம் என சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி இந்த விழாவில் பயனடைந்தவர்களுக்கு மட்டும்தான் 4 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. அம்மாவின் ஆட்சியில் இனி இத்திட்டத்தில் 4 கிராமம் என்பதை அதிகப்படுத்தி 8 கிராமாக வழங்கப்படும். 2016–2017க்கு முன்பாக பசுமை வீடுகள் திட்டம் ஊரக பகுதிகளில் மட்டும் இருந்தது படிப்படியாக பேரூராட்சி, நகராட்சி என விரிவுபடுத்தப்பபட்டு இன்று பேரூராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இன்றைக்கு 100 பயனாளிகளுக்கு அனைவரும் வீடு கட்டும் திட்டத்தில் இந்த பணி ஆணை வழங்கப்படுகிறது. மேலும் மகளிருக்கு 50 சதவீத மானியத்தில் ஸ்கூட்டர் வழங்கும் அம்மாவின் திட்டத்தை அரசு வழங்கும். மேலும் மகளிருக்கு மகப்பேறு

நிதிஉதவித்தொகை ரூ.12,000 யிலிருந்து 18 ஆயிரமாக உயர்த்தியது மட்டுமின்றி அரசுப்பணியில் உள்ள பெண்கள் பேறு கால விடுப்பினை 6 மாத்திலிருந்து 9 மாதமாக உயர்த்தி உத்தரவிட்டார்கள். அம்மாவின் திட்டங்கள் பின்பற்றி நடைபெறும் அம்மாவின் அரசு என்றும் மக்களுக்கு உதவக்கூடிய அரசாக இருக்கும் என கூறினார்.

இவ்விழாவில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வழியில் பேரறிஞர் அண்ணாவின் கனவு நினைவாகும் வகையில் 10ம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு திருமண உதவித்தொகை ரூ.25,000 மற்றும் 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டது. 2016 ல் இது 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தப்பட்டது.

பசுமை வீடுகள் பொறுத்தமட்டில் 200 சதுரடி என்பதை 300 சதுரடியாக உயர்த்தி சூரிய ஒளி மின்திட்டத்துடன் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்கிற நோக்கத்தில் தமிழகத்தில் 60,000 வீடுகள் 1 வருடத்திற்கு ஒதுக்கப்படுகிறது. 2011–2016 வரை 3 இலட்சம் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளது.

அனைவரும் வீடு வழங்கும் திட்டத்தில் ரூ.3,15,000 மதிப்பீட்டில் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ.1,50,000 மத்திய அரசு மானியம் ரூ.60,000 மாநில அரசு மானியம், ரூ.1,05,000 ம் பயனாளி பங்குத்தொகை ஆகும். இதனடிப்படையில் இந்த 100 வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசின் இத்திட்டங்களை பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு ஊரக மற்றும் தொழில்துறை அமைச்சர், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டார சேவை மைய கட்டடத்தையும், தென்னேரியில் ரூ.14.43 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மைய கட்டடத்தையும், தேவரியம்பாக்கத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மைய கட்டடத்தையும், குண்ணவாக்கத்தில் ரூபாய் 14.43 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மைய கட்டடத்தையும், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தின் முதல் தளத்தையும், வெண்பாக்கத்தில் ரூ.17 இலடசம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடத்தையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரகதம் குமரவேல், ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பழனி, உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வாலாஜாபாத் திரு.பா.கணேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.கண்ணன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. சங்கீதா , பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.சுமா ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,காஞ்சிபுரம்.